**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**

**O.S. No. 35 /2024**

**தேதி** : 01.04.2025

**(வா.சா.1)** : **திருமதி.சாரதாமணி**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:</u>** நான் இந்த வழக்கின் 3 ஆம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் (எண்ணிக்கை 8) **வா.சா.ஆ.7.** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. மேற்படி எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று இந்த வழக்கில் நான் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**:

(கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/–செல்வி.S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.